**முதன்மைக் கல்வி அலுவலகம் திருவண்ணாமலை மாவட்டம்**

**வகுப்பு: 12 பாடம் : தமிழ்**

**அரையாண்டுத் தேர்வு விடைக்குறிப்புகள் - 11.12.2019**

## பகுதி - I

**I. சரியான விடை . 14x1 = 14**

1. எழுதியிருப்பின் மதிப்பெண் தருக
2. அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
3. ஈ) தந்தை வழிச் சமூக முறை
4. இ) ஏப்ரல் - 22
5. ஈ) அ, ஆ, இ அனைத்தும்
6. அ) இறையன்பு
7. அ) சொல்லிசை அளபெடை
8. ஈ) ஈறுபோதல்
9. ஆ) வளர்தளம்
10. அ) வெண்பா
11. அ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்
12. இ) 1-(iii), 2 –( I), 3 –( iv) 4 –( ii)
13. ஆ) அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்
14. ஆ) சாந்தா தத்

## பகுதி – II 12x2 = 24

### பிரிவு - 1

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** 15.

**15. தண்டியலங்காரம்**

✓ அணி இலக்கணம் கூறும் நூல்களில் ஒன்று.
✓ காவியதரசம் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது
✓ நூலாசிரியர் தண்டி ஆவார்.

**16.** மழைக்காலத்தில் சூரியனின் திடீர்ப் பயணத்தால்,
நனைந்திருந்த நகரம் வெளிச்சம் பட்டவுடன் பட்டைத்தீட்டிய வைரமாக காட்சியளித்தது.

**17.** உரிய காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், உலகத்தைவிடப் பெரியது.

**18.** ஆறு பெரும் பிரிவுகளை உடையது.

1. பால காண்டம் ,
2. அயோத்திய காண்டம்,
3. கிட்கிந்தா காண்டம்,
4. ஆரண்ய காண்டம்
5. சுந்தர காண்டம்
6. யுத்த காண்டம்

### பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**19.** 'நடைபெற்றியலும்' என்னும் 'நடை நவின்றொழுகும்' என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.

✓ ஆசிரிய நடைத்தே வஞ்சி: ஏனை
வெண்பா நடைத்தே கலி

என்றும் சொல்லுகிறது.

- ✓ நடை என்ற சொல், தெளிவான பார்வையோடு தொல்காப்பியத்தில் இடம் பெறுகின்றது.
- ✓ அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்றது.

**20.**

- ✓ கி.பி. 2 ஆம் நூற்றாண்டில், 'தாலமி' என்பவரால் 'மல்லியர்பா' என்னும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.
- ✓ ஆங்கிலேயர் குடியேற்ற இடம்.

**21.** உரிய காலத்தில் விதைத்தல், சரியான காலத்தில் நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்.
ஞாலம் கருதினும் கைக்கூடும் காலம்
கருதி இடத்தால் செயின்

## பிரிவு - 3

**.எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

**22.** பலகை – பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.
பல + கை – பல கைகள் இணைந்தால்தான் வெற்றி கிடைக்கும்.

23. படிமம் என்றால் காட்சி என்பது பொருள்.
(எ-கா)"காலை இளம் வெயில்
நன்றாக மேய
தும்பறுத்துத்
துள்ளிவரும் புதுவெயில் (அ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது என்று வரும் புறநானூற்று பாடல் இரண்டில் ஒன்று எழுதினால் போதுமானது.

24. 1) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.
2) இரவுக்கு சிறியதந்தையைக் (சித்தப்பாவை) காவலுக்குப் போகுமாறு சொல்.

**25.** தண்டியலங்காரம் - அணியிலக்கண நூல்
தொடர்நிலை செய்யுள் – காப்பியத்தைக் குறிக்கிறது.

**26.** காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர்.
"பிறனில் விழைவோர்
கிளையொடுங் கெடும்" என்பது கம்பராமாயணத்தின் பாவிகம்.
அல்லது
அரசியல் பிழைத்தோர்க்கு – சிலப்பதிகாரம்.

27. இளங்கோ அடிகள் சாத்தனாரிடம், "முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்தால் கூறுக!." எனக் கேட்டார்.

28. 1. **செய்த - செய்+ த் +அ**
செய் - பகுதி ,
த் - இறந்தகால இடைநிலை ,
அ – பெயரெச்ச விகுதி.

**2. சாற்றி - சாற்று +இ ,**
சாற்று – பகுதி ,
இ - வினையெச்ச விகுதி

www.Padasalai.Org

29. கோவலன் மதுரைக்குச் சென்**றான்.**
குதிரையும் யானையும் வேகமாக **ஓடின.**
அவன் வெண்மதியிடம் **பேசினான்.**
சென்னையிலிருந்து நேற்று **வந்தான்.**

**30.** நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்ப்பாடுகள் கொண்டு முடியும்.

**பகுதி – III** **7x4 =28**

**பிரிவு - 1**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**31.** சிவந்த சூரியன் உறங்க செல்வதற்காக மலையின் மேட்டை தலையணையாக பயன்படுத்தி மாலையில் மேற்கு நோக்கி பயணிக்கின்றது.

- ✓ அந்நேரத்தில் வானம் சிவந்த பூக்காடாக காட்சி அளிக்கிறது.
- ✓ இவ்வாறு இவ்வரியானது இயற்கையை கண்டு உவப்பு எய்திய அழகை அழகாய் கூறி நிற்கிறது.
- ✓ இதில் உருவக அணியும், உவகைச்சுவையும் பயின்று வந்து படிப்போர்க்கு கவிதையின் சுவையினை நல்குகிறது.

**32. இடம்** : சத்திய மூர்த்தி மொழிப்பெயர்த்த ‘விருந்தினர் இல்லம்’ எனும் கவிதை தலைப்பில் இடம் பெற்றுள்ள வரிகள் ஆகும்.

- ✓ **பொருள்** : வக்கிரம், அவமானம், வஞ்சனை இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்தோடு வரவேற்க வேண்டும் என்கிறார்.
- ✓ **விளக்கம்** : மனித மனம் மனிதர் வாழும் இல்லமாகும். இந்த இல்லத்திற்கு ஆனந்தம், சோர்வு, அற்பத்தனம் என்று மாறி மாறி விருந்தினர்கள் வந்து போவார்கள். எல்லாரையும் வரவேற்க வேண்டும்.
- ✓ வக்கிரம், அவமானம், வஞ்சனை, இவற்றை வாயிலுக்கே சென்று வரவேற்க வேண்டும். அவற்றால் புதிய அனுபவங்கள் கிடைப்பதால், நன்றி செலுத்துமாறு ஆசிரியர் கூறுகிறார்.

**33. உவமை : யானை புகுந்த நிலம் போல**

**விளக்கம்** : குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாகும்.

- ✓ நூறு மடங்கு பெரிய வயலாக இருந்தாலும் யானை தனித்துச் சென்று வயலில் புகுந்து உண்ணுமாயின் அதன் வாயில் புகுந்த நெல்லைவிட அதன் கால்களால் மிதிபட்டு அழிந்த நெல்லின் அளவு அதிகமாகும்.
- ✓ எனவே அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு, கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும் என்று பிசிராந்தையார் கூறுகிறார்.

**34.** நல்லூர் நத்தத்தனார் -

- ✓ பத்துப்பாட்டில் ஒன்று.
- ✓ ஒய்மாநாட்டு நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 269 அடிகளில் எழுதப்பெற்ற நூல்.
- ✓ பரிசில் பெற்ற பாணன் பரிசில் பெற விழையும் பாணனை ஆற்று படுத்துவது.

**கடையெழு வள்ளல்**

பேகன்,பாரி, காரி, ஆய், ,அதியன்,நள்ளி ,ஓரி

## பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**35.** வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.

- ✓ சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்,
- ✓ உரிய நேரத்தில் விதைத்தல்,
- ✓ நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்,
- ✓ அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்,
- ✓ உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் நிர்வாகநெறியும் இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.

**36.** பேகன் - ஆவினன்குடி என அழைக்கப்படும் பழநி மலையை.

பாரி – பறம்பு மலை.(பிரான் மலை)

காரி – மலையமான் நாடு (திருக்கோவிலூரைச் சுற்றியுள்ளவை)

ஆய் - பொதிய மலை.(குற்றாலம், பாபநாசம், அகத்தியர் மலை)

அதியன் - தகடூர்.(தர்மபுரி)

நள்ளி – நளி மலையை(ஊட்டி)

ஓரி - கொல்லி மலை.

**37.** இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே, இல்வாழ்வில் பயனாகும் என சங்ககால மக்கள் எண்ணினர்.

- ✓ அதன் தொடர்ச்சியாகவே, இன்றைய சமூக அமைப்பு 'கூட்டுக்குடும்பத்தை' வலியுறுத்துகிறது.

38. **அணி** : செய்யுளில் இருபொருளுக்கு ஒப்புமைக் கூறி அவற்றில் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக்காட்டுவது வேற்றுமை அணி ஆகும்.

**எ - கா:** ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி --- தண்டியலங்காரப்பாடல்.

**விளக்**கம்: தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள இருளகற்றும் என்ற ஒற்றுமையை முதலில் கூறி பின்னர் தமிழுக்கு நிகர் எதுவுமில்லை என வேறுப்படுத்தி கூறுவதால் இது வேற்றுமை அணி (பொருள்)

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**39. தொடை நயம்,**

**மோனை, -**

**பெ**ற்ற - **பெ**ற

**ஊ**ற்றெடுத்த - **உ**லக

**க**ற்று – **க**ம்பன்

**தெ**ற்றென - **தெ**ய்வ

**எதுகை,**

பெ**ற்**ற, பெ**ற**

ஊ**ற்**றெடுத்த க**ற்**று

தெ**ற்**றென

**சுவை நயம் - பெருமிதம்**

**அணி : உயர்வு நவிற்சி (எவையேனும் மூன்று நயங்கள்)**

**40.** என்னால் உறுதியாக கூறமுடியும். நல்ல பழக்கவழக்கங்களை நான் கடைபிடித்துவருகின்றேன். எனக்கு மூத்தோரையும், வாழ்த்துபவரையும், நல்லோர்களையும் நான் மரியாதை செலுத்தி வணங்கி வருகின்றேன். அவர்களுடைய வாழ்த்துகள் என்னை

வளரச்செய்கின்றன. தவிர என் மனதிற்கு முழுமையைத்தரும் நல் பழக்கமான எழுதுதல், இசைகேட்டல், நடனம் ஆடுதல் , பாடுதல் போன்ற செயல்களிலும் ஈடுபாடுகொண்டு திகழ்கிறேன்.

**41.** நன்மை செய்தால் நன்மை விளையும், தீமை செய்தால் தீமை விளையும் (அ) இல்லாத பொழுதுதான் அதன் பெருமை உணர முடியும் - மாணவர்களின் கற்பனை கதை

**42.** இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை பயின்றுவரும்.

- ✓ ஈற்றடி முச்சீர் மற்றவை நான்கு சீர்
- ✓ ஈரசைச்சீர்கள் மாச்சீர் விளச்சீர்.
- ✓ மூவசைச்சீர்கள்- காய்ச்சீர் மட்டும்.
- ✓ ஈற்றுச்சீர் - நாள், மலர், காசு, பிறப்பு எவையேனும் ஒன்றைக்கொண்டு முடியும்.
- ✓ **வகை** – குறள்- நேரிசை, இன்னிசை, நேரிசைச் சிந்தியல், இன்னிசைச் சிந்தியல்.

## பகுதி – IV 3x6 = 12

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.**

**44.** சிற்ப நூலாசிரியர்களால் நன்னிலத்தை ஆடல் அரங்கத்திற்காக தேர்ந்தெடுத்தார்கள்.

- ✓ மூங்கிலால் முறையான அரங்கம் அமைத்தனர்.
- ✓ தம் கைபெருவிரலால் 24 அளவினைக் கொண்டதாக மூங்கிலை வெட்டினர்.
- ✓ ஏழுகோல் அகலமும், எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.
- ✓ தூணின் நிழலானது அரங்கில் விழாதபடி அழகான நிலை விளக்குகளை நிறுத்தினர்.
- ✓ ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என மூன்றுவகை திரைச் சீலைகளை அமைத்திருந்தனர்.
- ✓ ஓவிய வேலைப்பாடுமிக்க மேல் விதானத்தையும் அமைத்தனர்.
- ✓ சிறந்த முத்துகளால் இயன்ற மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கவிடப்பட்டனர்.
- ✓ இவ்வாறு சிலப்பதிகாரத்தில் நாட்டிய அரங்கின் அமைப்பு புதுமையும், பொலிவும் பெற்று திகழ்ந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். (எவையேனும் ஆறு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

**(அல்லது)**

- ✓ இராமன், வீடணனுக்கு முடிசூட்டி மகிழ்ந்த தருணத்தில், குகனுடன் சேர்ந்து நாங்கள் ஐவர் ஆனோம். பின்னர், கதிரவன் மகனாகிய சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம்.
- ✓ உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே, உன்னுடன் சேர்ந்து எழுவர் ஆனோம் என்றார்.

**45.** தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ச.த. சற்குணர், நிகழ்த்திய கிறித்துவமும், தமிழும் என்ற உரையால், ஆராய்ந்து, 'கிறித்துவமும் தமிழும்' எனும் ஆய்வு நூலை படைத்தளித்தார்.

- ✓ தொல் எழுத்து ஈடுபாட்டின் காரணமாக 'பௌத்தமும் தமிழும்", "சமணமும் தமிழும்" நூலை படைத்தளித்தார்.
- ✓ சங்ககாலத்திற்கு அடுத்த காலத்தை தமிழர்கள் இருண்ட காலம் என்றனர். களப்பிரர் ஆட்சி காலத்தை ஆய்வில் கொண்டு, "களப்பிரர் ஆட்சியில் தமிழகம்" எனும் நூலை எழுதினார்.
- ✓ கவின் கலையை என்றைக்கும் உணரும் வகையில் 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' என்னும் நூலால் பெருமை சேர்த்துள்ளார்.
- ✓ 'தமிழ்நாட்டு வரலாறு' என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான சான்றாகும்.

- ✓ 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' என்னும் நூல் வேங்கடசாமி அவர்களின் அரிய ஆவணப்பணிகளில் ஒன்றாகும்.
- ✓ வரலாற்று ஆய்வுகள், கலையியல் ஆய்வுகள் இலக்கிய ஆய்வுகள் போன்றவற்றை தொகுத்திருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.

**பெற்ற பட்டங்கள்:**

தமிழ்ப் பேரவைச் செம்மல், ஆராய்ச்சிப் பேரறிஞர் போன்ற பட்டங்களை அளித்து மயிலை.சீனி. வேங்கடசாமி அவர்களை தமிழகம் பெருமை படுத்தியுள்ளது. நம் பாடப்பகுதி வாயிலாக இவர் ஆராய்ச்சிப் பேரரறிஞர் என்பதை நம்மால் உணர முடிகிறது.

**(அல்லது)**

- ✓ காலையில் எழுந்து, என்னுடைய வேலையை யாரையும் எதிர்ப்பார்க்காமல் நானே செய்துக்கொள்வேன்.
- ✓ என் தந்தைக்கும், தாய்க்கும் ஏதேனும் வேலையை செய்து உதவியாக இருப்பேன்.
- ✓ மாலையில் பள்ளி விட்டு வீடு திரும்பிய நான், பாடம் படிப்பேன்.
- ✓ அம்மாவிற்கு உதவியாக அவர்கள் வந்தவுடன் சாப்பிடுவதற்கு சிற்றுண்டி எடுத்து வைப்பேன்.
- ✓ என் அப்பா வந்தவுடன் அவர் கொண்டு சென்ற உணவு பாத்திரங்களை கழுவி வைப்பேன்.
- ✓ சமைத்த உணவை சாப்பிடுவதற்கு உணவு மேசைக்கு கொண்டுவந்து வைப்பேன்.
- ✓ அனைவரும் சாப்பிட்ட பிறகு, பாத்திரத்தை கழுவும் இடத்தில் கொண்டு போடுவேன்.
- ✓ மொத்தத்தில் தொல்லை தராத நல்லப்பிள்ளையாக நடந்துக்கொள்வேன்.

**46. முதல்கல்**

**(உத்தமசோழன்)**

**முன்னுரை:**

பயிர்களை வாழவைப்பது மழையாகும். அம்மழை பெருமழையாகி, வெள்ளமாய்த் தேங்குகையில் பயிர்களையே அழித்துவிடுகிறது. இதற்கு காரணம் இயற்கை நீர்த்தேக்கங்களை முறையாக பராமரிக்கப்படாமையே ஆகும். இதை உணர்த்தும் வகையில் அமைந்த 'முதல்கல்' எனும் சிறுகதையில் வரும் மருதனின் பண்பு நலன்களைக் காண்போம்.

**வானொலி செய்தியைக் கேட்டு அடைந்த பதற்றம்:**

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் பலத்த மழை பெய்யக் கூடும் என்ற செய்தியைக்கேட்டவுடன், மருதப்பன் துடித்துப்போனான். 'சம்பாவிற்காக நீரை எதிர்ப்பார்த்துவிட்டு, மழை காட்டிய கருணையால் இப்பொழுதுதான் நாற்று நட்டு ஒருவாரம் ஆன 'குழந்தைப் பயிர்கள் தான்' மழையின் அதிக அன்பினால் மழை நீர் வயல்முழுதும் மூழ்கி கிடக்கிறதே! 'இன்னும் ஒருநாள் மழை நீர் தேங்கினாலும், மழை மீண்டும் பெய்தாலும் பயிர்கள் அழிகிவிடுமே' என மிகவும் வருந்தினான்.

**மருதப்பனின் யோசனை:**

உபரி நீர் வடிவதற்கான மதகைப் பார்த்த அவனுக்கு இருஉணர்வு தோன்றியது. நீர் வடிவதற்கு வழியில்லாமல் மண்டிக்கிடந்த காட்டாமணக்குச் செடியைப்பார்த்து அதிர்ந்தது ஒன்று, இதை அகற்றினால், நிலத்தில் உள்ள நீரை வடிகட்டலாம் என்ற யோசனை மற்றொன்றாகும்.

**ஊர் கூடி தேர் இழுக்கலாம் :**

அச்செடிகளை அகற்றுவதற்கு ஊரில் உள்ளவர்களை அழைத்தால், அனைவரும் சேர்ந்து விரைவில் அகற்றிவிட்டு, பயிரை காக்கலாம் என்ற மகிழ்ச்சியில், எதிரில் வாய்க்காலில் மீன் பிடித்த மருதனிடம் கூறினான். அதற்கு அவன் இது நடக்காத காரியம் என பதில் அளித்துவிட்டு தன் வேலையில் மூழ்கினான்.

ஊரில் பெரிய மிராசான காளியப்பன் கிழவனைப்பார்த்து செய்தியை தெரிவித்தான். ஊரார் இவர் வார்த்தைக்கு மதிப்புக்கொடுப்பார் என்ற எண்ணத்தில். ஆனால் அவர் அதை மறுத்துவிட்டார். நாம்

அழைத்தால் கூலி கேட்பார்கள். அதுமட்டுமல்லாமல் நாளை அவசர வேளையாக தன் மகள் ஊருக்கு செல்ல இருப்பதாகவும் தெரிவித்தார்.
‘நாகூர் பிச்சை’ எனும் பெயர் கொண்ட ‘பிரேம் குமார்’ ஊரில் படித்த பட்டதாரி. ஓர் அமைப்பிற்குத் தலைவன். அவனை சந்தித்துப்பேசினால், இக்காரியம் கை கூடும் எனும் நம்பிக்கையில், அவனிடம் சென்ற மருதனுக்கு
அதுவும் தோல்வியில் முடிந்தது. ஊர் கூடி தேர் இழுப்பது, இழுக்காகியது.

**பொதுநலம் மிக்கவன் இவன்:**

இதுவரை இவன் தன் நிலமும் நீர் மூழ்குகிறது என்ற பதைப்பில் இருக்கிறான் என்றால் இல்லை. இவனுக்கு நிலமே கிடையாது. இந்த ஊரில் உள்ள அறுபது குழி நிலத்தில் இம்மியும் தனக்கு கிடையாது. தன் கையும் காலும்தான் சொத்து. இந்த ஊர் இல்லை என்றாலும் ஊர் ஊராக சென்று கூலிக்கு வேலைப்பார்ப்பவன். ஏன் வருந்த வேண்டும்? என மனைவி திட்டுகிறாள்.

**தன்னிலை மறந்தவன்**

ஊர் வாழ ஒத்துழைப்பு கேட்ட அவனுக்கு உதவி கிடைக்காததால் செயலற்று இருந்தான். தனக்கு வைத்த உணவின் சுவையும் அறியாது கடைமைக்குச் சாப்பிட்டான்.

**தன்னம்பிக்கை:**

இரவில் மனைவி அவனைத் தேட, அவன் வீட்டில் இல்லை. நடு இரவில் தன்னால் முடிந்தவரை முயற்சி செய்வோம் என்ற எண்ணத்தில் தண்ணீரில் இறங்கி செடிகளை
அறுத்துப்போட்டுக்கொண்டிருந்தான். அதை கண்ட மனைவி தானும் இறங்கினாள். மறுப்பு தெரிவித்த அனைவரும் ஒவ்வொருவராக இறங்கினர். ‘தடையின் கற்களை முதலில் நீக்கியவன் இவன்’ ‘இவன் வைத்த முதல் கல்’ எல்லாரையும் இறங்க வைத்தது.

**முடிவுரை:**

நல்லது செய்ய உடன் யார் வருவார்கள் என தவிக்காதீர்கள். தான் முன்வந்தால், பிறர் நிச்சயம் பின்னால் வருவார்கள் என்பதற்கு இக்கதை ஒரு சிறந் த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**(அல்லது)**

- ✓ **முன்னுரை :** “ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்” என்று பாடிய ஔவையின் வரிக்கு ஏற்ப ஒவ்வொரு ஊர்களும் நீரின்றி பொலிவிழந்து காணப்படுகின்றன. ஒரு காலத்தில் குறிஞ்சியும், முல்லையும் மருதமுமாக காட்சி அளித்த ஊர்கள் அத்தனையும், பாலையாக மாறி வருகின்றன. இதற்கெல்லாம் காரணம் அறிவியல் முன்னேற்றமா? நகர பெருக்கமா?
- ✓ **பாட்டிகள் சொன்ன கதை:**
- ✓ மழை நீரில் மீன்கள் துள்ளி வருமாம்? வாசலில் நின்று வேடிக்கை பார்க்கும் சிறுமிகள் தங்களின் பாவாடையை மீன் பிடிக்கும் வளையாக போட்டு மீன் பிடித்து, மழைக்கு ருசியாக மண்சட்டி மணக்க குழம்பு வைத்து சாப்பிட்டார்கள் என்று கூறுவார்கள்.
- ✓ **அம்மாக்கள் சொன்ன கதை :**
- ✓ மார்கழி மாதத்தில் விடியற்காலை இருட்டில் குளக்கரையில் பெண்கள் எல்லாம் குழுமி நீச்சல் போட்டி நடத்துவார்களாம். ஊர் நடுவே இருக்கும் குளத்தில் ஆண்கள் எழுந்திருக்கும் முன் இளம் பெண்கள் குளித்து முடித்து, ஆடைகளை துவைத்து, கதை பேசி பாட்டு பாடி, கூட்டமாக இருப்பார்களாம்.
- ✓ **அப்பா சொன்ன கதை:**
- ✓ ஆலமரத்தின் விழுதை பிடித்து குளத்து நீரில் தொப்பென குதித்து நீச்சல் இடுவார்களாம். தாத்தாவின் குரல் கேட்டு தப்பிப்பதற்காக, குளத்தில் தலை வெளியே தெரியாமல் மூச்சு பிடித்து நீருக்குள் மூழ்கி இருப்பார்களாம். மனிதனை கண்டு ஓட்டில் ஒளிந்துக்கொள்ளும் ஆமை, கால் அடியில் வந்து தன்னை காட்டி கொடுத்துவிடுமாம். இப்படி சுவாரசியமான கதையை கேட்டதும் உண்டு.

✓ **மாமா சொன்ன கதை:**

✓ பரண்மீது இருந்த பழைய சாலைக் காட்டி, பத்து ஏக்கருக்கு நெல் நடவு செய்ய, பசு மாட்டைக்கட்டி, பத்து நிமிடத்தில் நீர் இறைத்து உழவு செய்தார்களாம்.

✓ **ஒவ்வொன்றும் அடையாளம் :**

✓ இறந்த பின் எலும்பு கூடு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு அடையாளம் காட்டி நிற்கின்றனவோ அதுபோல எங்கள் ஊரிலும் சில குளங்களும், கிணறுகளும் நீரோடு இருந்திருக்கின்றன என்ற அடையாளத்தை காட்டிக்கொண்டு நிற்கின்றன.

✓ **அடையாளமும் இன்றி :**

✓ வளர்ந்து வரும் பெருநகரங்கள், ஏரிகளையும், ஆறுகளையும் அடையாளத்திற்கு கூட விட்டு வைக்காமல் தொழிலகங்களாக, கல்வி நிலையங்களாக மாற்றிவிட்டன. மாறுதல் வேண்டும் வாழ்வதற்கு! வாழ்தலை மாறுதலாக்கி இன்று வீழ்தலுக்கு போய் கொண்டிருக்கிறோம் என்பதை தலைக்குளம் கதை வாயிலாக எங்கள் ஊரின் அடையாளமற்ற நிலையை நான் உணர்கிறேன்.

✓ **முடிவுரை :**

✓ “இனி ஒரு விதி செய்வோம்” இனியேனும் நீர் நிலைகளை புதிதாக உருவாக்குவோம். அடையாளம் தெரிந்த நீர் நிலைகளைத் தூர் வாருவோம். மழைநீரை தேக்கி வைக்கும வழிகளைகளை கையாளுவோம். அழகிய ஊரை காணுவோம்.

<u>பகுதி - V</u> **4+2 = 6**

**VIII. <u>அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.</u>**

47.

அ) காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே:
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்:
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்:.

ஆ) சென்ற இடத்தால், …(.அ) எப்பொருள் யார்யார்… (அ) எவ்வது உறைவு எந்த குறளை எழுதிகாலும் மதிப்பெண் கொடுத்தல்வேண்டும்..